DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM

**C.C.No. 332/2019**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW5 | Caste | : | |
| Name | : | சுரேஷ் | Age | : | 38 |
| F/N | : | மலைமேகம் | Occupation | : | உதவி பேராசிரியர் |
| Village | : | வானக்கார தெரு | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 24th day of October 2024.

**24.10.2024**

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் வானக்காரதெருவில் குடியிருந்து கொண்டு இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.01.2018-ம் தேதி நான் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணியில் இருந்த போது இரவு 08.15 மணிக்கு முனியாண்டி மகன் முருகேசன் என்பவர் தன்னை தெரிந்த ஒரு நபர் இடது கன்னத்தில் கட்டையால் பெருங்குளம் புரோட்டா ஹோட்டல் அருகே இரவு 07.15 மணிக்கு அடித்ததாக சொல்லி சிகிச்சைக்காக வந்தார். அவருக்கு இடது கன்னத்தில் 1x1 Cm அளவில் சிதைந்த காயம் இருந்தது. அவருக்கு சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டு அவரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டது. அவருக்கு எடுக்கப்பட்ட சிடி ஸ்கேன் மூலம் அவரது இடது முக பக்கவாட்டிலும், இடது கண் புருவ பக்கவாட்டிலும் எலும்பு முறிவு கண்டறியப்பட்டது. அவருக்கு உரிய சிகிச்சை அளித்து பல் மருத்துவரின் பரிந்துரை பெற்று அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். முருகேசன் சொன்னதுபோல் கட்டையால் அடித்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)**

**மறு விசாரணை - இல்லை**

**(ஒப்பம்/-க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**